# சைவப் புலவர்களும், மடங்களும் வளர்த்த தமிழ்

முனைவர். மா. கிருஷ்ணவேணி
உதிவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி, வாணியம்பாடி.
Email ID: krishnareshrup@gmail.com

18

**ஆய்வுச் சுருக்கம்**

சைவ மயத்தை வளர்பதற்காகச் சைவப் புவலர்களும் சைவ மடங்களும் தோன்றின. சைவ சமயத்தை வளர்க்கத் தோன்றிய மடங்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு துணை புரிந்துள்ளன. சைவ நூல்களை காப்பதற்கும், படைப்பதற்கும் தோன்றிய இம்மடங்களும் புலவர்களும் ஏராலமான தமிழ் இலக்கியங்களை உருவாக்கி தமிழ் வளர்ச்சிக்கு காரணமாக இருந்தனர். இம்மடங்களில் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்களில் சிலர் தமிழ் நூல்களைக் கற்றவர்களாகவும் அதில் ஆய்வு ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருந்தனர் முகமதியரின் படையெடுப்பினால் சைவமும், தமிழும் பாதிக்கப்பட்டன. இந்த வேளையில் இம்மடங்கள் புலவர்களை ஆதரித்து ஏட்டுச்சுவடிகளைப் பாதுகாத்தன. புலவர்களை ஆதரித்த மடங்களின் தலைவர்களும் புலவர்களும் சமயநூல்களை எழுதி புதிய இலக்கணங்களும், தலபுராணங்களும் மடங்களின் வழியாகத் வெளியிட்டனர். தமிழ் வளர்த்த மடங்களுள் திருவாடுதுறை ஆதினம், தருமபுர ஆதினம், திருப்பனந்தாள் காசி மடம் மதுரை மடம் போன்றவை குறிப்பிடத்தகன. சிவப்பிரகாசர், தாயுமானவர், குமரகுருபரர், அருணகிரி நாதர் போன்ற சைவப் புலவர்கள் ஒன்று கூடி தமிழ் வளர்த்த நிலையை இக்கட்டுரையின் மூலமாக அறியலாம்.

**முன்னுரை**

சைவசமயம் தமிழுக்குச் செய்த அளப்பரிய தொண்டுகள் சங்க காலத்திலிருந்தே தொடர்கின்றன. திருமுருகாற்றுப் படை இயற்றிய நக்கீரரிலிருந்து பிற்காலத்தைச் சார்ந்த வள்ளலார் வரை சைவமும் தமிழும் சிறக்கப்பாடுபட்டுள்ளனர். திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் சித்தர் பாடல்கள் சைவமடங்கள் வளர்த்த தமிழ் பிற சைவ இலக்கியங்கள் போன்றன தமிழ் இலக்கியங்கள் வளரக் காரணமாக உள்ளன. யோகமும் ஞானமும் வாய்க்கப் பெற்றவர்கள் சித்தர்கள். இவர்கள் அணிமா, மகிமா முதலிய அட்டமா சித்திகளை எய்துதுலின் சித்தர்கள் எனப்பட்டனர். சிந்துப் பாடல்களைத் தோற்றுவித்துப் பாடியவர்கள் அறுபதிற்கும் மேற்பட்ட சித்தர்கள் இருந்தனர். சித்தர்கள் மருத்துவநூல், இவர்களிற் சிலர் யோகிகளாய்ச் சிறப்புற்றவர்கள். சிலர் மருத்துவர்களாய் விளங்கியவர்கள் என்று குறிப்பிடுவார். இவர்கள் வளர்த்த மருத்துவக்கலை சித்த மருத்துவம் என இன்றும் போற்றப்படுகிறதுது. மந்திர நூல், யோக நூல், ஞானநூல், இரசவாத நூல் போன்ற பலவகையான நூல்களை சைபச் சித்தர்கள் இயற்றி தமிழ் வளர்ச்சிக்கு வித்திட்டார்கள் என்பதை இவ் ஆய்வுக் கட்டுரையில் காணலாம்.

**திருவாடுதுறை ஆதீனம் மடம்**

நமச்சிவாய மூர்த்தியால் கி.பி. 14 – ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட இம்மடத்தின் மூலம் சைவ சமய சாத்திர நூல்களான இருபா இருபாஃது, வினா வெண்பா போன்ற நூல்களுக்கு உரை தோன்றியது. அம்பலவான தேசிகரால் தசகரியம், சன்மார்க்க சித்தியார், சித்தாந்த சிகாமணி, சித்தாந்த பஃறொடை, சிவாச்சிரம தெளிவு, உபநிஷ்ட வெண்பா, உபதேச வெண்பா, போன்ற 10 நூல்கள் தோன்றி தமிழ் வளர்ச்சிக்கு வித்திட்டன. ஶ்ரீ ஈசான தேசிகர் இலக்கணக்கொத்து, தசகாரியம் பத்து என்ற நூல்களை எழுதியுள்ளார். நன்னூலுக்கு உரை எழுதிய சங்கர நமச்சிவாயரும், சிவஞான போதத்திற்கு உரை எழுதிய சிவஞன முனிவரும் இம்மடத்தைச் சேர்ந்தவர்கள். இம்மடங்கள் ஆண்டுதோறும் திருமந்திர மாநாட்டை நடத்துகின்றது. திருவெண்ணெய் நல்லூரில் சிவஞானபோத மாநாட்டையும், மற்ற இடங்களில் பன்னிரு திருமுறை மாநாட்டையும் நடத்துகின்றன. இதில் புலவர்களுக்குப் பாராட்டுச் செய்தல், மலர்கள் வெளியிடல், திருமந்திர விளக்க நூல்களை வெளியிடல் ஆகிய செயல்களைச் செய்கின்றன.

**தருமபுர ஆதீனம் மடம்**

திருஞானசம்பந்த தேசிகரால் தஞ்சை மாவட்டத்தில் கி.பி. 14 ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட இம்மடத்தின் மூலம் அரிய சிறந்த 800 நூல்கள் வெளிவந்துள்ளதாகத் தெரிகின்றது. இம்மடங்கள் தேவாரத் திருமுறைகளுக்கு உரைஎழுதி வெளியிட்டுள்ளது. திருக்குறள் உரைவளம் என்னும் நூல் இம்மடத்தின் வழியாக வெளிவந்துள்ளது. ஞானசம்பந்தம் என்ற சமய இலக்கிய மாத இதழை வெளியிட்டு வருகிறது. மேலும் இம்மடத்தில் உள்ள நூலகத்தில் 20 000 க்கும் மேற்பட்டநூல்கள உள்ளன. தேவாரப் பள்ளியும், சித்தாந்தக் கல்லூரியும் இங்குள்ளன. சமய மாநாடுகள், திருமுறை பெருவிழாக்கள், சமயச் சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன. ஆண்டுதோறும் தமிழறிஞர்களுக்குப் பட்டமளித்தும், பணமுடிப்புச் செய்தும் உதவி வருகிறது. "இம்மடம் தற்போது தமிழ்க்கல்லூரி ஒன்றை நடத்தி வருகின்றது."[1]

**திருப்பனந்தாள் காசிமடம்**

ஶ்ரீ காசிவாசி தில்லை நாயக சுவாமிகளால் கி.பி. 1720 இல் இம்மடம் நிறுவப்பட்டது. இம்மடத்தின் சார்பில் திருப்பனந்தாளில் தமிழ்ப் புலவர் கல்லூரியும், ஶ்ரீ வைகுண்டத்தில் கலைக்கல்லூரியும், உயர்நிலைப் பள்ளியும், தேவாரப்பாட சாலையும் உள்ளன. இம்மடத்தின் சார்பாகக் குமரகுருபரன் என்னும் திங்கள் இதழ் வெளிவருகிறது. இம்மடம் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருக்குறள் உரைக்கொத்து, தேவாரம், திருவாசகம், பன்னிருதிருமுறை வரலாறு, திருமந்திரம், கந்தர்கலிவெண்பா, நீதிநெறி விளக்கம், சகலகலாவள்ளி மாலை போன்ற நூல்களை வெளியிட்டுள்ளது.

**மதுரைமடம்**

இம்மடத்திற்கு திருஞான சம்பந்தர் மடம் என்ற பெயரும் உண்டு. இம்மடம் தமிழ்த் கல்லூரி ஒன்றை நடத்தி வருகின்றது. சைவ சமயத்தை இசைச் சொற்பொழிவுகளின் மூலம் வளர்த்து

வருகின்றது. பிற சமயத்தினரைச் சைவசமயத்தில் சேர்த்துக் கொள்ளும் பணியைச் செய்து வருகின்றது. பன்னிரு திருமுறைகளும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்பு அபரிமிதமானது. அவற்றிலி இருந்தே பக்தி இலக்கியங்கள் தோன்றுகின்றன. அடுத்தடுத்த கட்டங்களை எட்டி நடையிட்டு கீர்த்தனை வரையில் வளர்கின்றன. சந்தக் கவிக்கு வித்திட்டவர் ஞானசம்பந்தப் பின்ளையார் என்றால் அதை தமது திருப்புகழ் பாக்களால் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றவர் அருணகிரிப் பெருமான். திருவாசகத்தைப் போன்று, குட்டித் திருவாசகம் எனப்படும் வரதுங்க ராம பாண்டியர் இயற்றிய திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, தாயுமானவரின் பாடல்கள், அதன் தொடர்ச்சியாக வந்த குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் அனைத்தும் அன்னைத் தமிழுக்குக் கிடைத்த அணிகளல்லாவ?.

பெரியபுராணத்தைப் போன்று, 20 ஆம் நூற்றாண்டில் சேய்த்தொண்டர் புராணம் எழுந்தது. தேவாரத் திருப்பதிகங்களைப் போன்று வள்ளல் ராமலிங்கப் பெருமான் எண்ணற்ற பாடல்களைப் பாடினார். அவரைப் போன்று பாம்பன் சுவாமிகளும் பல்லாயிரக்கணக்கான பாடல்களால் முருகப் பெருமானைத் துதித்துள்ளார். பத்துப் பத்தாக பதிகங்கள் படைக்கும் முறை இன்றும் நிலவி வருகிறது என்றால் தேவாரத் திருப்பதிகங்களின் செல்வாக்கினை அளவிட்டு உணர முடியுமா? பன்னிரு திருமுறைகளும் தமிழுக்கு அளித்த கொடை அளப்பரியவை. வாழ்நாளில் ஒருமுறையேனும் அவற்றை நாம் ஓதியுணர வேண்டும். ஓதியுணர்ந்தால் சைவத் தமிழ்க் கடல் என்னும் அமுதத்தை மாந்தி அமரராவோம். இது முக்காலும் உண்மை.

தமிழில் முதன்முதல் தோத்திர இலக்கியங்களாக எழுந்தவை பன்னிரு திருமுறைகள். பரிபாடல் போல நெடிய செய்யுளாக இல்லாமல், கலிப்பா வகையினதாக, நான்கடி கொண்டதாக, இனிய எளிய சொற்களால் இயன்ற அந்த தோத்திர இலக்கியங்கள், தமிழக மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. தமிழகத்தில் மட்டுமின்றி, கர்நாடக மாநிலத்திலும் திருமுறைகள் தங்கள் செல்வாக்கினைச் செலுத்தின அறுபத்துமூவரின் வரலாறுகளை அங்கு சரிதமாகவே பாடும் அளவுக்கு வீரசைவத்தில் தனது தாக்கத்தைச் செலுத்தும் அளவுக்கு திருமுறைகளின் செல்வாக்கு வளர்ந்திருந்தது. இசையிலேயே தனித்தமிழ் இலக்கியங்களைப் படைக்கத் தொடங்கினர் சமயக் குரவர்கள் ஞானப்பால் உண்டருளிய ஞானசம்பந்தர் மாலைமாற்று, ஏகபாதம், திருவெழுகூற்றிருக்கை என இன்றைய சித்திரகவிகளுக்கு அன்றே முத்திரையிட்டு தொடங்கி வைத்தார். திருநாவுக்கரசர் தாண்டகம் என்ற செய்யுள் வகையை உருவாக்கினார். அவரது நேரிசை, குறுந்தொகையும் தனித்த இலக்கிணம் கொண்டவையை. சுந்தரமூர்த்தியாரின் பாடல்கள் அனைத்தும் உரையாடல் தொனியைக் கொண்டவை என்பதால் அவை நாடகத் தமிழுக்கு இலக்கானதாக இருந்தன.

சைவத்தைப் பொருத்தவரை காரைக்கால் அம்மையார் (மூன்றாம் நூற்றாண்டு) தொடங்கி சேக்கிழார் (12 ஆம் நூற்றாண்டு) வரை இருபத்தேழு அருளாளர்கள் வழங்கிய "பன்னிரு திருமுறை' சைவ சமயத்தின் கவசமாகவே கருதப்படுகிறது. மேலும் குமரகுருபரர், தாயுமானவர், வள்ளலார், அருணகிரிநாதர் போன்றோரும் சைவத்தால் தமிழையும், தமிழால் சைவத்தையும்

மேம்படுத்தியுள்ளனர். தமிழ் இலக்கியங்கள் எவ்வகையிலெல்லாம் சைவத்தை வளர்த்தெடுக்க உதவின என்பதை உணர்த்தும்விதமாக உள்ளன.

**சங்க இலக்கியத்தில் சைவம்**

புறநானூற்றுப் பாடல்கரிகள் சிவபெருமானின் கோயிற்சிறப்பும் சிவனை வணங்குவதற்காகப் பாண்டியன் பெருவழுதியின் குடைதாழ்க என்று புலவர் பணிந்திருந்த பாங்கும் குறிப்பிடப்படுகின்றன.

“பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கட்செல்வர் நகர் வலம் செயற்கே”[2] (புறம்.06)

ஆய் அண்டிரன் கடையேழு வள்ளல்களுள் ஒருவன். சிறந்த சிவ பக்தன். இவன் அரிதாகப் பெற்ற ஆடையினைச் சிவபெருமானுக்குச் சார்த்தி மகிழ்ந்ததாகச் சிறுபhணாற்றுப் படை குறிப்பிடுகிறது.

“நிலம்; நாகம் நல்கிய கலிங்கம்
ஆல் அமர் செல்வதற்கு அமர்ந்தனன் கொடுத்த” [3] (சிறுபாண்: 95 -99)

கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை போன்ற நூல்களிலும் சைவத்தைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. மதுரை மருதனிள நாகனார்,

“ஓங்குமலைப் பெருவிற் பாம் நாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்” [4] (புறம், 55: 1 – 6)

**சைவப் பெரியோர்களின் தமிழ்ப்பணி**

தமிழர் இறைவனை உணர்த்தக் கையாண்ட சொற்களுள் ஒன்று கந்தழி. இது பற்றித் தொல்காப்பியர்,

“கொடி நிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே”[5] ( தொல். புறத். 33)

கந்தழி, முருகு போன்ற சொற்கள் முழுமுதற் கடவுளான சிவம் என்பதைக் குறிப்பதாகும். சைவத்தை அன்புச் சமயம் என்று கூறலாம். சிவனாகிய இறைவன் அன்பினின்று மாறுபட்டவர் என்பதைத் திருமூலர்,

“அன்புஞ் சிவமு மிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமாய் தாரு மறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந்திருப் பாரே”[6] (திரும. 270)

என்று கூறுகின்றார். சேக்கிழார் தம்முடைய பெரிய புராணத்தில் அன்பு நெறியார்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

“ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்”[7] (திருமலைச் சருக்கம். 144)

**தொகுப்புரை**

- எஸ்டிலின் கார்பெண்டர், மிகவும் குறிப்பிடத்தக்க சைவ சமயத்தின் ஆக்கம் தென்னாட்டுத் தமிழர்களிடம் காணப்படுகிறது என்கிறார். ஜி.யு.போப்பையர் தமிழ் மக்களின் நுண்ணறிவின் மிகத் தேர்ந்த படைப்பு சைவசித்தாந்தம் என்று மொழிகின்றார்.
- பெர்னாட்டு என்பவர் இயல்பில் ஊறிய கற்பனை ஒளியுடனும் உணர்ச்சிப் பெருக்குடனும், வெளிப்பாட்டு அழகுடனும் கூடிய பக்தி இலக்கியச் செல்வத்தினை உலகில் தமிழர்தம் சைவத்தினைத் தவிர எச்சமயமும் எய்தவில்லை என்று கூறுகின்றார்.
- டாக்டர் சர்.சி.பி. இராமசுவாமி ஐயர், தென்னாட்டிற்கு சிறப்புரிமையுடைய சைவ சித்தாந்தக் கொள்கை, தமிழ் மேதைமையின் குறிப்பிடத்தக்க மிகவும் சிறந்த படைப்புக்களின் ஒன்று என்று உணர்த்துகின்றார்.
- ஆங்கிலச் சமயக் கலைக்களஞ்சியம் உலகிலேயே மிகவும் மேம்பட்ட கோயிற்கலை வல்லுநர்கள் தமிழினத்தவர்களே இந்தியாவில் உள்ள கோயில்களுள் நணிசிறந்தது தஞ்சைப் பொருவுடையார் கோயிலே என்று சைவக் கோயில்களின் சிறப்பைக் கூறும் வகையில் தென்னாட்டு சிவநெறியைப் பாராட்டுகின்றது. சைவப் பெரியார்களின் தமிழ்ப்பணியை என்னும் போது வியப்பாகவே தோன்றும். அத்தகைய சிறப்புடைய பக்திப் பனுவல்கள் பலவற்றைத் தமிழுக்குத் தந்துள்ளனர். இன்றும் சைவமடங்கள் இப்பணியைச் சிறப்புடன் செய்து வருவது சிறப்புக்குரியதாகும்.

**முடிவுரை**

சமயம் காப்பதோடு செந்தமிழ் இலக்கியங்கள் வெளிவரவும் மடங்கள் பாடுபட்டன. மடத்தின் தலைவர்களும் இலக்கண இலக்கியப் பயிற்சி நிரம்பப் பெற்றவராய் இருந்தனர். பழைய நூல்களைப் பாதுகாத்தும், புதிய நூல்கள் தோன்ற உதவியும் செயல்பட்டனர். ஆண்டுதோறும் இம்மடத்தார் திருமந்திர மாநாடும், சிவஞான போத மாநாடும் நடத்தி வருகின்றனர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, உவேசா போன்ற இம்மடமே பேணிப் புரிந்தது. சிவஞான சித்தியார் உரை, கணபதி, முருகன் நவமணிகள் போன்ற சிறந்த படைப்புக்களை வெளியிட்டுள்ளது. இது மொட்டை மடம் எனும் பெயரினது. மிகப்பழமையானது.

**அடிக்குறிப்பு**

1. தமிழ் இலக்கிய வரலாறு முனைவர் ந. இளங்கோ பக்கம் - 210
2. புறநானூறு கழகவெளியீடு பாடல் – 06
3. சிறுபாண் . பாடல் 95 -99
4. புறம் பாடல் 55.1-6
5. தொல். புறத்தினை நூற்பா 33
6. திருமந்திரம் பாடல் - 270
7. திருமலைச் சருக்கம் பாடல் 144

**துணைநூற் பட்டியல்**

1. தமிழ் இலக்கிய வரலாறு முனைவர் ந. இளங்கோ
2. புறநானூறு கழகவெளியீடு
3. சிறுபாண்ணாற்றுப்படை
4. தொல். புறத்தினண
5. திருமந்திரம்
6. திருமலைச் சருக்கம்